# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## உறுதியான வேலை நிறுத்தம்! அதுவே நம்மை காப்பாற்றும்!!!

அன்பு மிக்க தோழர்களே,

இன்று (20.04.2015) காலை 11.00 மணிக்கு புது டெல்லியில் அகில இந்திய FORUM கூட்டம் நடைபெற்றது. இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக, உறுதியாக நடத்த வேண்டும் என முடிவு செய்துள்ளது. 21.04.2015 அன்று காலை 00.00 மணிக்கு துவங்கி 22.04.2015 அன்று இரவு 24.00 மணி வரை வேலை நிறுத்தம் நடைபெறும். இந்த வேலை நிறுத்தம் வெளி நடப்பு வேலை நிறுத்தம். இந்த இரண்டு நாட்களும் பெரும்பான்மையான ஊழியர்களை திரட்டி அலுவலகங்களுக்கு முன் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் வேலை நிறுத்தத்திற்கு மீடியாக்களில் விளம்பரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த புகைப்படங்களையும் செய்திகளையும் மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

“SAVE BSNL SAVE NATION” என்ற முழக்கத்தோடு தேசத்தின் நலன் காக்க, BSNLஐ புத்தாக்கம் செய்ய, நமது வாழ்க்கையை பாதுகாக்க நடைபெறும் வரலாற்று சிறப்பு மிக்க போராட்டம் இது. BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகள் சங்கங்களும், ஊழியர்களின் அனைத்து சங்கங்களும் மட்டுமல்ல. BSNLல் உள்ள ஒப்பந்த ஊழியர்களின் சங்கமான TNTCWU-வும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்க முடிவு செய்து அறைகூவல் விட்டதோடு கடுமையான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. எனவே இதிலிருந்தே இந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துக் கொள்ள முடியும்.

**எனவே நமது வாழ்வின் ஆதரமாம் BSNLஐ பாதுகாக்கவும், தேசத்தை பாதுகாக்கவும் நடைபெற உள்ள ஏப்ரல் 21-22 இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை முழு வெற்றியாக்குவோம்.**

**ஒன்று படுவோம்!**

**போராடுவோம்!!**

**வெற்றி பெறுவோம்!!!**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநிலச் செயலர்